# விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

# Student Organization of Liberation Tigers

SOLT (U.K.)

SOLT (U.K.)

(SOLT, BM BOX 3694, LONDON WC1 N3XX)

## தமிழீழ விடுதலைப் புலிகளும்... TRAG உம்...

கொட்டும் மழையைக் கண்டதும் தோன்றி மறையும் காளான்கள் போன்று, இலண்டன் மாநகரிலும் அவ்வப்போது இயக்கங்கள் தோன்றி மறைவது யாவரும் அறிந்ததே. தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளில் பசியாறும் பல்வேறு இயக்கங்கள் இலண்டனில் இருப்பது, வரலாறு கண்ட உண்மை.

தமிழ் அகதிகள் பிரச்சனை, அளப்பரிய பிரச்சனையாக இலண்டனில் இருந்துவரும் இவ்வேளையில், TAMIL REFUGEE ACTION GROUP ( T R A G ) எனப்படும் அமைப்பு சம்பந்தமாக தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு குறித்து பொது மக்களிற்கு அறிவிக்கவேண்டியது நமது கடமையாகும்.

ஒன்று :

TRAG ஆரம்பிக்கப்படுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தினால் எவ்வித அங்கீகாரமும் வழங்கப்படவில்லை; அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் எவரும் TRAG இன் அங்குரார்ப்பணத்தின் போது பங்கு பெறவில்லை என்பதையும்,

இரண்டு :

TRAG இன் நடவடிக்கைகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் எவரும் பங்குகொள்ள அனுமதிக்கப் படவில்லை என்பதையும்,

மூன்று :

TRAG இன் சார்பில் கூறப்படும் கூற்றுக்கள் எவற்றிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் எவ்விதத்திலும் பொறுப்பாளிகள் அல்ல, என்பதையும்,

நான்கு :

TRAG இன் பேச்சாளர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளில் எந்த நிலையிலும் அங்கத்துவம் வகிக்க வில்லை என்பதையும்,

இத்தால் தமிழ் மக்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

சரித்திரம் தொடர்கிறது



அன்று கண்டியர் அரசு

இன்று காடையர் அரசு